# ஹரோ தமிழ் பாடசாலை பேச்சுப் போட்டி 2024

**ஆண்டு - 9ம் அதற்கு மேற்பட்டவர்களும்**(Year – 9 and above )

31/08/2011 ற்கு முன் பிறந்தவர்கள்

(ஹரோ தமிழ் பாடசாலையின் தமிழ் வகுப்பு மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்)

**போட்டி நடைபெறும் திகதி 09/11/2024**

நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்

*இத்தரணியிலே பிறந்த பல்கோடி மக்களில் விரல்விட்டு எண்ணக்கூடிய சிலரே சரித்திரத்தில் இடம்பெற்று போற்றப்படுகின்றனர். காரணம் அவர்கள் உலகிற்கோ தமது சமூகத்துக்கு ஆற்றிய அளப்பரிய சேவையாகும். அதற்காக அவர்கள் விடாமுயற்சியுடன், வைராக்கியமாக கடுமையாக உழைத்துள்ளனர் இவ்வகையில் தமிழையும் சமயத்தையும் தனது இரு கண்களாகப் போற்றி பாதுகாத்து எமக்களித்த ஆறுமுகநாவலர் பற்றி பேசவந்துள்ளேன்.*

*இவர் ஈழத்தில் நல்லூரில் கல்விகேள்விகளில் சிறந்து விளங்கிய கந்தப்பிள்ளைக்கும் சிவகாமி அம்மைக்கும் கடைக்குட்டியாக 1822 ஆம் ஆண்டு மார்கழி 18 ஆம் திகதி பிறந்தார். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் ஆறுமுகம். இவர் சிறுவயதிலிருந்தே திருமுறைகளை ஓதுவதில் சிறந்து விளங்கினார். தமிழ் இலக்கண இலக்கியங்களை சேனாதிராஜ முதலியாரிடமும் சரவணமுத்துப் புலவரிடமும் கற்றுத் தேறினார். இவரது திறமையையும் ஆற்றலையும் கண்ட மத்திய கல்லூரி அதிபர் பீற்றர் பேசிவல் பாதிரியார் இவரை தமிழ், ஆங்கில ஆசிரியராக நியமித்தது மட்டுமல்லாது பைபிளை தமிழில் மொழிபெயர்க்க வைத்தார்.*

*ஆங்கிலேயர் ஆட்சியில் பெருமளவு மதமாற்றம் இடம்பெற்றதைக் கண்டு கவலையடைந்து, 1847 ல் முதன்முதலில் சமய சொற்பொழிவை வண்ணைவைத்தீஸ்வரன் கோவிலில் தொடக்கிவைத்தார். 26 வது வயதில் சைவப்பிரகாச வித்தியாசாலைகளை நிறுவினார். தேவாரங்களைத் தேடிப்பதிப்பித்தார். பலபுராண உரைகளை வெளியிட்டார். சமயக்கல்விக்கான சைவவினாவிடைகளை வெளியிட்டார். கோவில்களை ஆகமவிதிப்படி சீரமைப்புச்செய்தார். திருமுறைகளை தினமும் ஓதுவதற்கேற்ற முறையில் "பஞ்சபுராணம்" ஓதுவதை அறிமுகம் செய்து வைத்தார். இறக்கும் வரை வெள்ளிதோறும் பிரசங்கம் செய்து மதமாற்றத்தைத் தடுத்து காப்பாற்றியதால் 5வது சமயகுரவர் எனப்போற்றப்படுகிறார்.*

*தமிழைச் செழிப்படைய வைக்க தமது பாடசாலையில் பாரம்பரியக்கல்வி முறையை அமுலாக்கினார். இலவசக்கல்வி, இலவசநூல் வினியோகம், தாய்மொழிக்கல்வி என்பவற்றை ஊக்குவித்தார். சிறுவர்களுக்காக பாலபாடம் என்ற நூலை எழுதினார். தனது ஆக்கங்கள் தவிர பல இலக்கண இலக்கிய பதிப்புகளை அச்சேற்றி மீட்டுக்கொடுத்தார். அதுவரை இலக்கிய - கவிதை வடிவிலிருந்த நூல்களை இலகுவான வசனநடையில் கொண்டு வந்த சிறப்புரிமையாளர் இவர். பைபிளை தமிழில் மொழிபெயர்த்த அனுபவத்தால் இவர் தமிழுக்கு குறியீடுகளை அறிமுகப்படுத்தினார். தவிர நூல்களை வெளியிடும்போது உள்ளடக்கம், தலைப்பு, பக்கம், முகவுரை எழுதும் பழக்கத்தையும் ஏற்படுத்தினார்.*

*இவரது நாவன்மையையும், சொற்களைக்கையாண்ட திறமையையும் கண்டு, கேட்டு திருவாவடுதுறை ஆதீனம் "நாவலர்" என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது.*

*இவர் ஓர் ஆசிரியர், எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர், உரையாசிரியர், சொற்பொழிவாளர், பதிப்பாளர், பாடசாலை ஸ்தாபகர், சீர்திருத்தவாதி, நிர்வாகி என்பதனால் இவரை நாவலர், நிகண்டுலகின் வேந்தர், வசனநடை கைவந்த வல்லாளர், நடமாடும் அகராதி என பலபெயர்களால் பின்னால்வந்த தமிழுலகம் பாராட்டுகிறது. இவரது மேன்மையை "நல்லைநகர் நாவலர் பிறந்திலரேல் சொல்லு தமிழ் எங்கே? சுருதி எங்கே?" என்ற சி.வை தாமோதரம்பிள்ளை அவர்களது கூற்று உள்ளங்கை நெல்லிக்கனிபோல் காட்டுகிறது.*